Registered as a Newspaper

விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 14 [ 29-07-1993 ] வியாழக்கிழமை ஓசை 161

## உணவுப் பொருள்களில் சக்கரின்; நீரிழிவு, புற்றுநோய் ஏற்படும் அபாயம்

உணவுப் பொருள்களில் சக்கரின் கலப்பதால் நீரிழிவு, புற்றுநோய் ஏற்படும் சாத்தியக் கூறுகள் இருப்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்தின் வாராந்த கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது. நீரிழிவு நோய் உள்ளவர்கள் பாவிக்கும் இந்த சக்கரினை அந்நோய் இல்லாதோர் உட்கொள்வதன் மூலம், அதாவது சக்கரின் பாவித்து தயாரிக்கப்படும் உணவுப் பொருள்களை தொடர்ந்து உட்கொள்வதன் மூலம் நீரிழிவு நோய் ஏற்படும் அபாயம் இருக்கின்றதெனவும் அத்துடன் புற்றுநோய் ஏற்படலாம் என்ற அபிப்பிராயமும் நிலவுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை பம்பாய் மிட்டாய், அதனோடு சேர்ந்த தயாரிப்பான நிறஅப்பளம் போன்றவை சக்கரின் இன்றி தயாரிக்க முடியாதென அந்த மிட்டாய்களை செய்வோர் தெரிவிப்பதாகவும், இதுபோன்ற சக்கரின் பாவித்து தயாரிக்கப்படும் உணவுப் (4ஆம் பக்கம் பார்க்க)

# திருமலையில் புலிகள் அதிரடி; 6 படையினர் ஸ்தலத்தில் பலி!

## ஏனையோர் தப்பி ஓட்டம்

[திருமலை]

திருமலை மாவட்டத்தில், பிரதானவீதி ஒன்றில் இரவுக் காவல் கடமையில் ஈடுபட்ட இராணுவத்தினர் மீது நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் திடீர்த் தாக்குதல் ஒன்றை நடத்தினர். இதில் ஆறு இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப் பட்டனர். ஏனையோர் தப்பி ஓடிவிட்டனர்.

இத்தாக்குதலின் போது இராணுவத்தினரிடம் இருந்து பல ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர். இதேவேளை இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் எதுவும ஏற்படவில்லை.

இத் தாக்குதல்பற்றி மேலும் தெரியவருவதாவது: சுமித்திரா இராணுவ முகாமிற்கும் சாம்பல்பிட்டி இராணுவ முகாமிற்கும் இடைப்பட்ட பிரதான வீதியில் இரவுக் காவலில் நின்ற சிறிலங்கா இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதலை மேற்கொண்டனர்.

அவ்விடத்தில் நின்றபத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினரில் ஆறுபேர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். ஏனையோர் காயங்களுடன் தப்பியோடிவிட்டனர். சிறிலங்கா இராணுவத்தினரிடமிருந்து ஆயுதங்களும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

புலிகள் தரப்பில் சேதம் எதுவும் இல்லை.

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

திருமலை மாவட்டத்தில் இராணுவ முகாம்களுக்கு இடையில் பிரதான வீதியில் இரவுக் காவலில் ஈடுபட்டபின் அப்பகுதியில் தங்கியிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின்போது சில இராணுவ தளபாடங்கள் விடுதலைப் புலிகளால் கைபபற்றப்பட்டன.

மேற்படி தாக்குதலில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதவிபரம் வருமாறு:

★ 203 எறிகணை செலுத்தி — 01
★ ஏ. கே. எல். எம். ஜி. — 01
★ ரி 56-2 ரக துப்பாககிகள் — 03
★ ரி 56-1 ரக துப்பாக்கி — 01
★ தொலைத் தொடர்பு சாதனம் — 01
★ நடுத்தர ரவைகள் — 460
★ 203 எறிகணைகள் — 12
★ ஏ. கே. எல். எம். ஜி ரம் மகசின் — 05
★ ஏ. கே. எல். எம். ஜி. லிங்குடன் ரவைகள் — 500
★ ரி 56 ரவைக்கூடு — 11
★ ரி 81 ரவைக்கூடு — 05
★ ஏ. கே. கோல்சர் — 04
★ சப்பாத்து (சோடி) — 05
★ தொப்பி — 04
★ மழைக் கவசம் — 03
★ கத்தி — 01
★ மில்ரி பெலிற் — 01

அடையாளம் காணப்படவில்லை

## மட்டு. வாகரையில்

# இந்தியப் பிரதமர் ராவ் 14 வாக்குகளினால் தப்பினார்

## நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வி

(டில்லி)

பிரதமர் நரசிம்மராவுக்கு எதிராக எதிர்க் கட்சியினர் இணைந்து கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை 14 வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது. கடைசி நிமிடத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் பலனாக எதிர்க்கட்சிகளைசேர்ந்த சில அங்கத்தவர்கள் அரசுக்கு ஆதரவு அளித்து வாக்களித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனதாதள் கட்சியின் 7 உறுப்பினர்கள் மற்றும் ஒரு சிறிய கட்சியின் 4 உறுப்பினர்கள் ராவ் அரசுக்கு ஆதரவாக வாக்களித்ததாக சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்தார்.

நேற்று இப் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் பிரேரணையை ஆதரித்து 251 பேரும், எதிராக 265 பேரும் வாக்களித்தனர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அஜாய் முகபாத்யாவால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை இடதுசாரிக் கட்சிகள், தேசிய முன்னணி மற்றும் பாரதீய ஜனதாக் கட்சி ஆதரித்து வாக்களித்த ( 4 ஆம் பக்கம் பார்க்க )

## விமான தாக்குதலை நிறுத்த அரச அதிபர் கோரிக்கை

### பாதுகாப்பு அதிகாரிகளிடம் விடுப்பார்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்காவின் விமானப் படையினர் மக்கள் குடியிருப்புகள் மீது நடாத்தும் கண்மூடித்தனமான தாக்குதல்களை உடனடியாக நிறுத்த வேண்டும் எனத் தான் சிறிலங்காவின் பாதுகாப்பு உயரதிகாரிகளை நேரில் சந்தித்துக் கோரிக்கை விடவுள்ளதாக யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் நமது நிருபருக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில் மேற் ( 4 ஆம் பக்கம் பார்க்க )

## கிளாலி—பூநகரி படகுச்சேவை

கிளாலி பூநகரி படகுச்சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## இந்திய மீனவர் மீது சிறிலங்கா கடற்படை தாக்கு

### மூன்று மீனவர் காயம்

(சென்னை)

இராமேஸ்வரத்திலிருந்து கச்சதீவு அருகே மீன்பிடிக்கச் சென்ற இந்தியமீனவர்கள் சிறிலங்கா கடற்படையினரால் கடுமையாக தாக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற இச்சம்பவத்தில் சிறிலங்கா கடற்படையினர் துப்பாக்கிச் சூட்டில் மூன்று மீனவர்கள் காயமடைந்துள்ளனர். இவர்களில் ஒருவர் [4ஆம் பக்கம் பார்க்க]

# சாகும்வரை உண்ணாவிரதம்

# போர்க்கைதிகள் இன்று ஆரம்பிப்பர்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் பாது காப்பிலுள்ள 33 போர்க்கைதி... காப்பு அமைச்சின் செயலாளர் வோல்டர் பர்னான்டோ, ... மைச்சர் சந்திரிகா குமாரணதுங்க, அங்கிலிக்கன் திருச்சபை ... திருப்பதாக போர்க்கைதிகள் தெரிவித்தனர்.

வரு-
மாறு:

| | | | |
|---|---|---|---|
| ★ 203 எறிகணை செலுத்தி | — 01 | ★ ஏ. ஜே. கோல்சா | — 04 |
| ★ ஏ. கே. எல். எம். ஜி. | — 01 | ★ சப்பாத்து (சோடி) | — 05 |
| ★ ரி 56-2 ரக துப்பாககிகள் | — 03 | ★ தொப்பி | — 04 |
| ★ ரி 56-1 ரக துப்பாக்கி | — 01 | ★ மழைக் கவசம் | — 03 |
| | | ★ கத்தி | — 01 |
| | | ★ மில்ரி பெலிற் | — 01 |

## அடையாளம் காணப்படவில்லை

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் உடல் சிதைந்த நிலையில் வைக்கப்பட்டுள்ள ஒருவரின் சடலம் இன்னமும் எவராலும் அடையாளம் காணப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் சுப்பர் சொனிக் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலின் போது பலியானவரின் சடலமே அது.

இதேசமயம், இத்தாக்குதல் சம்பவத்தில் காணாமல் போய் விட்டார் என்று தேடப்பட்டு வரும் சிறுவர் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

## வீரச்சாவு



கப்டன் புவியரசன்

யாழ். மந்திகைச் சந்தியில் கடந்த 26ஆம் திகதி ஏற்பட்ட விபத்தில் சிக்கி விழுப்புண்ணுற்றிருந்த விடுதலைப் புலிப்போராளி ஒருவர் நேற்று முன் தினம் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த கப்டன் புவியரசன் (தங்கராசா மோகனதாஸ் - அன்புவழிபுரம் திருக்கோணமலை) னுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## மட்டு. வாகரையில் புலிகள்-படையினர் மோதல்

### லெப். வர்ணன் வீரச்சாவு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும், தமிழீழ விடுதலைபுலிகளுக்கும் இடையில் திடீர் மோதலொன்று இடம் பெற்றது.

கடந்த 26ஆம் திகதி மாலை 5-30 மணியளவில் மட்டக்களப்பிலுள்ள வாகரை-கண்டலடி என்ற இடத்தில் விடுதலைப்புலிகள் சென்றுகொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக அப் பகுதிக்கு பஸ்ஸில் வந்த இராணுவத்தினர் விடுதலைப்புலிகள மீது திடீர்த் தாக்குதலை மேற்கொண்டனர். இதனைத் தொடர்ந்து விடுதலைப்புலிகளும் எதிர்த்தாக்குதலை மேறகொண்டனர்.

இம் மோதலின்போது இராணுவ தரப்பில் ஏற்பட்ட சேத விபரம் தெரியவில்லை. விடுதலைப்புலிகள் தரப்பில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.



வீரச்சாவடைந்த லெப்டினண்ட் வர்ணன் (செல்லத்தம்பி மகேந்திரன் ஆரயம்பதி, காத்தான்குடி -மட்டக்களப்பு) னுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## காரைநகர் இராணுவம் மீது புலிகள் எறிகணைத் தாக்கு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கசூர்னா பீச்சில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது நேற்றுக் காலை தமிழீழ விடுதலைப்புலிகள் எறிகணைத் தாக்குதலைமேற்கொண்டனர்.

நேற்றையதினம்காலை 6-40 மணியளவில் தும்பில்பிட்டி கசூர்னா பீச்சில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல்களால் இராணுவ தரப்பினருக்கு ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவரவில்லை.

இத்தாக்குதலை தொடர்ந்து இராணுவத்தினர் சவுக்கடிப் பகுதியை நோக்கி எறிகணை தாக்குதல்களையும் கனன் தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.

## கொழும்பு செல்லும் நோயாளர் கவனத்திற்கு

வைத்திய சிகிச்சைக்காகக் கொழும்பு செல்லுவதற்குத் தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களையும் அவர்களுடன் கூடச் செல்பவர்களையும் தங்களுக்கு இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு, தண்ணீருடன், எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிககு யாழ். போதனா வைத்திய சாலைக்கு வருமாறு வைத்திய சாலைப் பணிப்பாளர் கேட்டுக் கொள்ளுகின்றார்.

# போர்க்கைதிகள் இன்று ஆரம்பிப்பர்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பிலுள்ள 33 போர்க்கைதிகளும் இன்று காலை 10-00 மணிக்கு மீண்டும் உண்ணாவிரதத்தைஆரம்பிக்கப் போவதாக அறிவித்துள்ளனர்

இது தொடர்பான அறிவித்தல் விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்திற்கும், இங்கிருந்து கொழும்பு சென்ற உறவினர் மூலம் சிறிலங்கா அரசு, மற்றும் பொதுநல நிறுவனங்களுக்கும் கடிதம் மூலம் அனுபபி வைக்கப்பட்டு விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க, பிரதமர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வோல்டர் பர்னான்டோ, கூட்டுப்படை தலைமை தளபதி ஹமில்டன் வனசிங்க, இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ண, பொலிஸ்மா அதிபர், எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா, மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க, அங்கிலிக்கன் திருச்சபை ஆயர் கென்னத்பர்னான்டோ, மனிதவள பாதுகாப்பு இயக்கத்தலைவர் மாதமப அஸஜி தேரர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கொழும்பு அலுவலகம், யாழ்ப்பாணம் அலுவலகம் ஆகியோருக்கு அறிவித்திருப்பதாக போர்க் கைதிகள் தெரிவித்தனர்.

இவர்கள் கடந்த 14ஆம் திகதி உண்ணாவிரதம் ஆரம்பிக்கவிருந்ததும் போர்க்கைதிகளில் 5பேரின் உடல்நிலை காரணமாக இவ் உண்ணாவிரதம் ஒத்தி வைக்கப்பட்டதும் தெரிந்ததே.

## நாளை தபால் அனுப்பப்படும்

நாளைபருத்தித்துறையில்இருந்து கொழும்பிற்கு புறப்படும் குமண கப்பல் மூலமாக தபால்கள் அனுப்பபட இருப்பதால் பொதுமக்கள் நேர காலத்துடன் தங்கள் கடிதங்களை அஞ்சலில் சேர்க்கும்படி வேண்டப்படுகின்றனர்.

# விடுதலை இன்றேல் மரணம்; அரசு ஏமாற்ற முடியாது!

## உண்ணாவிரதம் குறித்து பண்டார

(நமது நிருபர்)

விடுதலை இன்றேல் மரணம் என்ற உறுதியான முடிவுடனேயே இன்று நாம் எமது சாகும்வரை உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பிக்கிறோம். அரசு இந்த விடயத்தில் எம்மை முன்னர் ஏமாற்றியதைப்போல் இம்முறை ஏமாற்றமுடியாது.

இவ்வாறு இன்றுமுதல் சாகும்வரை உண்ணாவிரதத்தை மீண்டும் ஆரம்பிக்கும் யுத்தக்கைதிகள் தெரிவித்தனர். விடுதலைப் புலிகளால் யுத்தக் கைதிகளாக கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாகத் தடுத்துவைககப்பட்டிருக்கும் சிறிலங்கா பொலிஸ் யுத்தக் கைதிகள் சார்பில் பி. எஸ். பி. பண்டார என்பவர் இதுபற்றி நமது நிருபருக்கு விபரிக்கையில் இம்முறை நாம் ஆரம்பிக்கும் உண்ணாவிரதம் மிகவும்மோசமான நிலையையே எமக்கு உருவாக்கும். ஆயினும் நாம் இம்முறை வேண்டுவது விடுதலை அல்லது மரணத்தையே இந்த இரண்டில் ஒன்றை நோக்கியே எமது உண்ணாவிரதப்போராட்டம் இன்று ஆரம்பமாகிறது.

எந்த ஓர் அழுத்தங்களாலும் நாம் இப் போராட்டத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மண்கிண்டிமலையில் கைப்பற்றப்பட்ட இராணுவச் சடலங்கள் புலிகளால் எரிப்பு

(கொழும்பு)

மண்லாறு மண்கிண்டிமலை இராணுவமுகாம் தகர்ப்பின் போது விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட படையினரின் சடலங்கள் இராணுவத்திடம் ஒப்படைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. சடலங்கள் அழுகிய நிலையில் காணப்பட்டதால் அவை ஒப்படைக்கக்கூடிய நிலையில் இல்லை என வெரித்தாஸ்வானொலி தெரிவித்தது.

உருக்குலைந்த இந்த சடலங்கள் புலிகளால் எரிக்கப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வலி - மேற்கில் சிக்கிய 25 பொதுமக்கள் விடுவிப்பு

[யாழ்ப்பாணம்]

சிறிலங்கா இராணுவத்தினரின் பிடிக்குள் சிககிய இளவாலை மற்றும் மாதகல் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 25 பொதுமக்கள் இன்று காலை விடுதலை பெற்று யாழ்ப்பாணம் வருகின்றனர்.

கடந்த 26 ஆம் திகதி, சிறிலங்கா இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பிற்குளளாகிய வலி வடக்கு மற்றும் வலி மேற்குப் பகுதிகளுக்கு விஜயம் செய்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் குழுவே அவர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கைதிகளின் பெற்றோர் விரதம்; பிரார்த்தனை

எமது பிள்ளைகள் உண்ணாவிரதம் இருக்கும் போது அதற்கு ஆதரவாக நாம் விரதம் வழிபாடு என்பன செய்ய முடிவு செய்துள்ளோம் என கைதிகளின் பெற்றோர் நேற்று நமது செய்தியாளருக்கு தெரிவித்தனர்.

இது குறித்து மேலும் அவர்கள் தெரிவிக்கையில், நாம் கட்டுப்பாடான உணவுடன் பிரார்த்தனையை மேற்கொள்வோம். எமது பிள்ளைகளின் சாத்வீகப் போராட்டம் மிகவும் ஆபத்தான நிலையிலேயே மேற்கொள்ளப்படுகிறது. எனவே இவர்களுக்கு இறைவனின் ஆசி தேவை என்பதனை உணர்ந்தே இதனைச் செய்கிறோம் என்றனர்.

## நான்கு தமிழ் இளைஞர் கொழும்பில் கைது

கடந்த சனிக்கிழமை கொழும்பு மெசஞ்சர் விடுதியில் தங்கியிருந்த நான்கு வடபகுதி வாலிபரை அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

குலசிங்கம் கிளிநொச்சி, சற்குணம் கோப்பாய், விஜயகுமார் கட்டைடப்பராய், ஆனந்தராசா இணுவில் ஆகியோரே அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டோராவர்.

## வரி விளம்பரம்

### உடன் விற்பனைக்குண்டு

ஒரு மாதம் வளர்ந்த சைனென் பிறவுண் சேவல் குஞ்சுகள் இரண்டு கிழமை வளர்ந்த புறொய்லர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. மல்லிகாபதி, சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய் (5539)

### சமய அறிவுப் போட்டிகள்

நல்லைக் கந்தனின் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் சைவசமய விவாகாரக் குழுவினால் சமய அறிவுப் போட்டி, பண்ணிசைப போட்டி, சமய அறிவுப் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி ஆகியவை நடைபெறவுள்ளன.

இப் போட்டிகளில் பங்குபற்ற விருப்புவோர் சுகாதார அலுவலகத்திலும், அலுவலக நாட்களில் மாத்திரம் மாநகராட சி ருன்றத்தின் பிரதான அலுவலகத்திலும் இந்து விகுதி அலுவலகத்திலும் கட்டணத்தை செலுத்தி எதிர் வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். (தி)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



உதயம்
28-5-1974
மன்னார் பாலைக்குளி

வீரச்சாவு
29-7 1991
அன்னியனை அழிக்க
ஆனையிறவில்

### 2-ம் லெப். றெனோ
(ஜெ. மதியழகன்)

பகை வெட்டிச் சாய்க்கும் வாளாக
புகைவிட்டுக் குமுறும் எரிமலையாக
குகை விட்டுக் கிளம்பும் புலியென புறப்பட்டவனே
ஆதிக்க வெறியரை அழிக்க
ஆனையிறவு விரைந்த வீரமறவா
வெல்லுமடா உன்லட்சியம்
காலம் பதில் சொல்லுமடா நிச்சயம்.

உனக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் பேரணியில் இணைந்து உயிர் நீத்த அத்தனை மாவீரர்களுக்கும் எங்கள் கண்ணீர்ப் பூக்களை உங்கள் பாத கமலங்களில் காணிக்கையாக சமர்ப்பிக்கின்றோம்.

இவரது இல்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலி நிகழ்வில் சகல போராளிகளையும் வருகை தருமபடி வேண்டி நிற்கும்,

கண்டி வீதி,
கைதடி நுணாவில்.
தமிழீழம். (5058)

பெற்றோர்,
சகோதரர்கள்


# நியூ யாழ் சைனீஸ்

நூடில்ஸ்
கோழி புரியாணி
(f)பிறைட் றைஸ்
Beer, Stout & Local Arrack

பிறந்தநாள், பிரியாவிடை, திருமணவைபவங்களுக்கான சிற்றுண்டி, மேலைத்தேய, கீழைத்தேய உணவு வகைகளுக்கும் மற்றும

## சைனீஸ் உணவு வகைகள்

அனைத்தையும் நண்பர்களுடனும், குடும்பத்துடனும் உண்டு மகிழ அமைதியான, பாதுகாப்பான சூழலில் உங்களை வரவேற்கின்றது.

சைனீஸ் உணவுவகைகளுக்கு தனித்துவம் வாய்ந்தவர்கள்
**நியூ யாழ் சைனீஸ்**
124, முதலாம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம். (5554)


# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

# கார் இறக்குமதி மோசடி; அரச அதிகாரிகள் சம்பந்தம்

(கொழும்பு)

சலுகை அடிப்படையில் தீர்வை இல்லாமல் இறக்குமதி செய்யப்பட்ட கார்களை உயர் அரச அதிகாரிகள் விற்றிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது இவ்வாறு விற்பனை செய்யப்பட்ட சுமார் 200 கார்களை இந்த மாத இறுதிக்குள் தாம் கைப்பற்ற உள்ளதாகப் பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரச உயர் அதிகாரிகள், அரசியல் வாதிகள் மற்றும் பிரமுகர்கள் தீர்வை இல்லாமல் இறக்குமதி செய்த சுமார் 1800 கார்களை விற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தில் உள்ளவர்கள் சில தரகர்கள் மூலம் கார் அனுமதிப்பத்திரங்களை தனியார் நிறுவன உரிமையாளர்களுக்கு விற்றுள்ளனர்.

தீர்வை இல்லாமல் 1820 கார்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் அதில் 10 வீதம் மாத்திரம் சட்டபூர்வமான உரிமையாளர்களிடம் பாவனையில் உள்ளதாகவும் தெரியவந்துள்ளது

கொழும்பிலுள்ள கார் வியாபார நிறுவனங்கள் தீர்வை இன்றிக் கார் இறக்குமதி செய்ய வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களைபணம்கொடுத்து வாங்கியுள்ளார்கள். காரின் ரகத்திற்கு ஏற்ப விலையும் மாறுபடுகின்றது. இறக்குமதி அனுமதிப்பத்திரம் ஒன்று 1,00,000 ரூபா முதல் 1,50,000 ரூபாவரை கொழும்பில் விற்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சலுகை அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட கார்களை ஐந்து வருட காலப் பகுதியில் விற்கவோ, வாடகைக்கு விடவோ முடியாது.

பொறியியலாளர்கள், டாக்டர்கள், சட்டத்தரணிகள், அரசியல்வாதிகள் மற்றும் பிரமுகர்கள் தமது இறக்குமதி அனுமதிப்பத்திரங்களை விற்றுள்ளார்கள்.

இவ்வகையான கார்களின் உரிமை மாறியிருந்தால் காரின் முதல் உரிமையாளரிடமிருந்து அதன் பெறுமதியைவிட மூன்று மடங்கு பணத்தை வசூலிக்க சுங்கத் திணைக்களத்துக்கு அதிகாரம் உண்டு. இந்தப் பணத்தைக் கட்டத்தவறின் கார் பறிமுதல் செய்யப்படுவதுடன் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யலாம்.

இந்த மோசடியினால் அரசுக்கு 2,730 மில்லியன் ரூபா நஷ்டம் மேற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

### குமுதவில் 75 அரச ஊழியர் செல்வர்

இந்தத் தடவை 75 அரசாங்க ஊழியர்களை ஏற்றிக் கொண்டு குமண கப்பல் கொழும்பு நோக்கிப் புறப்படும் என்று யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

குமண கப்பல் நாளை வெள்ளிக் கிழமை கொழும்பு நோக்கிப் புறப்படும் என்று அறியப்படுகிறது.

யாழ் செயலகம் 75 அரசாங்க ஊழியர்களை கொழும்பு பயணத்திற்காக பதிவு செய்துள்ளது. (தி)

# சோதனையென்ற பெயரில் தமிழரிடம் பணம் பறிப்பு

(கொழும்பு)

கொழும்பில் தமிழர்களிடம் அடையாள அட்டைகளை பரிசோதிப்பதாக கூறிக்கொண்டு பின் அவர்களிடம் பணம், பொருள்களை அபகரித்துச் செல்லும் நபர்கள் தற்போது ஆட்டோக்களிலும் வந்து தமது கைவரிசையைக் காட்டுகின்றனராம்.

அண்மையில் கிராண்ட்பாஸ் வீதியில் வடபகுதி இளைஞர் ஒருவர் மருதானை ரயில் நிலையத்திலிருந்து சென்று கொண்டிருந்தபோது ஆட்டோ ஒன்றில் வந்து இடைமறித்த இருவர் 'அடையாள அட்டையை எடு சோதிக்க வேண்டும்' என்றனர் அவ்வேளை அவரிடமிருந்த 2500 ரூபா பணத்தை அபகரித்துக் கொண்டு அவர்கள் ஆட்டோவில் புறப்படவே அவ்விளைஞர் கூச்சலிட்டாராம்.

உடனே ஆட்டோவை நிறுத்தி அந்த இளைஞரிடம் கத்தியை காட்டி மிரட்டிய அந்நபர்கள் அவரிடம் 400 ரூபாவை மட்டும் திருப்பிக் கொடுத்துவிட்டு ஆட்டோவில் தப்பிச் சென்று விட்டனராம்.

### தையல் கண்காட்சி

சாவகச்சேரி லயன்ஸ் கழக ஆதரவில் தையல் கண்காட்சியும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் முதலாம் திகதி தென் மட்டுவில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் நடைபெறும்.

## 1-ம் ஆண்டு, 7-ம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்:
17-11-1919
மறைவு:
09-08-1992

தோற்றம்:
08-08-1921
மறைவு:
18-08-1986



அமரர்
சின்னட்டியர் கணபதிப்பிள்ளை
(முன்னாள் ஆசிரியர் அல்லைப்பிட்டி, முன்னாள் மட்டக்களப்பு அரச திணைக்கள கணக்காய்வாளர், முன்னாள் மீசாலை தெற்கு, உரும்பராய் ப.நோ.கூ.சங்க முகாமையாளர்)
திதி: 29-07-1993

திருமதி
தெய்வானைப்பிள்ளை கணபதிப்பிள்ளை
திதி: 26-07-1993

எங்களுக்காகவே ஒவ்வொரு கணமும் வாழ்ந்து உழைத்து ஒளியான அப்பா, அம்மா உயிருக்குயிரான உத்தமர்களே உங்கள் இருவரையும் நினைந்து உருகிக்கரைகின்றோம் உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் பிரார்த்தித்துக்கொண்டே இருப்போம்.

மாவடிப் பிள்ளையார் கோவிலடி,
மீசாலை கிழக்கு,
மீசாலை. (5557)

பிள்ளைகள்: க. ஞானரஞ்சிதம் (றஞ்சி)
க. கனகரஞ்சிதம் (றதி).
மகன், மருமகள், திரு. திருமதி இராசகுலேந்திரன்.

## நினைவு கூருகின்றோம்...

### 1993-07-29

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் வவுனியா - பண்டாரிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

லிங்கேஸ் (வன்னியசிங்கம் ஜவன் ஜெயராஜ் - 847, உப்புவெளி - திருமலை)

ரூபிகா (வினோதா வேலாயுதபிள்ளை - குளவிசுட்டான், நெடுங்கேணி - மணலாறு)

லெப். தயாளன் [சிவகுரு மோகனசுந்தரம் - அலைக்கல்லுப் போட்டகுளம், ஓமந்தை - வவுனியா]

கஜந்தா (இந்திராணி மணியம் - இரணைமடு - கிளிநொச்சி)

நியூ யாழ் சைனீஸ்
124, முதலாம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம். (5554)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கப்டன்
**வண்டு**
[சுப்பிரமணியம் யோகேஸ்வரன்]
(பச்சை)



வீரவேங்கை
**சுபாஷினி**
[சுப்பிரமணியம் புஸ்பாஞ்சலி]
(புஸ்பா)

**1968-2-15** < மலர்வு > **1975-4-27**
**1991-7-29** < வீரச்சாவு > **1991-8-3**

1991இல் ஆனையிறவு இராணுவமுகாம் தகர்ப்பின் போது வெற்றிலைக்கேணியில் தரையிறக்கப்பட்ட இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்கள்

தாயினும் நிகரான – எம்
தாயகத்தை மீட்டிடவே
தணியாத தாகத்துடன்
தலைவன் வழி நடந்தீரே
சாவினைச் சரித்திரமாக்கி
சாதனை பல புரிந்தீரே
விடியலுக்கு விளை நிலமாய்
தமிழுக்கே வித்தாகி
தமிழீழ சொத்தானீர்
ஆண்டிரண்டான போதும்
உங்கள் நினைவுடனே வாழ்கிறோம்.

வடமராட்சி கிழக்கு,
உடுத்துறை. (5440) – குடும்பத்தினர்

## நினைவு கூருகின்றோம்...

## 1993-07-29

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் வவுனியா - பண்டாரிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**லேடிபாலா/பாலன்** (பொன்னையா லலித்குமார் - பண்டாரிக்குளம் - வவுனியா)

1987ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய-

★ **சுமந்த** (பந்தக்குட்டி நாகேந்திரம் - பூநகர், மூதூர் - திருமலை)

★ **வயிரவன்** (காளிராசா - மாவடிச்சேனை, வெருகல்- திருமலை)

மட்டு - வந்தாறுமூலையில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கெதிரான சுவரொட்டிகள் கொண்டு செல்கையில் சிறிலங்கா அதிரடிப்படையினர் சூட்டில் வீரச்சாவெய்திய-

**குமார்** (முருகேசு சந்திரகுமார் - வந்தாறுமூலை - மட்டு)

1988ஆம் ஆண்டு மன்னார் - அடம்பன் ஆட்காட்டிவெளிப் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச் சமரின் போது வீரச்சாவெய்திய-

**கப்டன் எட்வின்** (சூசைப்பிள்ளை அன்ரன் ஜோய்- பள்ளிமுனை - மன்னார்)

1989ஆம் ஆண்டு முல்லைத்தீவு - 3-ம் கட்டைப்பகுதியில் அமைந்திருந்த இந்தியப்படையினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**கப்டன் ஜேசுதாஸ்** (வீரகத்தி விக்னேஸ்வரன் - கற்குளம், நெடுங்கேணி - மணலாறு)

**லெப். அன்சார்** (சீவரத்தினம் சிவரூபன் 161-½ கட்டை, கண்டி வீதி, பரந்தன் - கிளிநொச்சி)

மட்டு - படுவான்கரைப் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

திருமலை - மூதூர் மல்லிகைத்தீவுப் பகுதியில் சிறிலங்கா ஊர்காவல படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 14 தமிழர்கள்.

1990ஆம் ஆண்டு யாழ் - கோட்டையில் சிறிலங்கா விமானப்படையினரின் விமானத் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**லெப்.சிறி** (கிருஷ்ணமூர்த்தி ஹரிபத்மநாதன்- 48,புதுவீதி, அத்தியடி - யாழ்)

**அகஸ்ரின்** (அ. செல்வராசா - யாழ்ப்பாணம்)

கைதடி மேற்கில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1991ஆம் ஆண்டு ஆனையிறவுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆ க. வெ நடவடிக்கையின் போது தடைமுகாம் மீது 2ஆவது தடவையாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**அலிஸ்ரன்** (தியாகராசா கிருஷ்ணபாலன் - 4-ம் கிராமம் - சென்றல்காம் - அம்பாறை)

**லெப். சதீஸ்** (கணபதிப்பிள்ளை புஸ்பராஜன் - ஆலங்கேணி, கிண்ணியா - திருமலை)

**லெப். ரூபன்** (கணபதிப்பிள்ளை கேதீஸ்வரன் - ஐயனார் திடல், தமபலகமம் - திருமலை)

**லிங்கேஸ்** (வன்னியசிங்கம் ஜவன் ஜெயராஜ் - 847, உப்புவெளி - திருமலை)

**ரூபிகா** (வினோதா வேலாயுதபிள்ளை - குளவிசுட்டான், நெடுங்கேணி - மணலாறு)

**லெப். தயாளன்** [சிவகுரு மோகனசுந்தரம்-அலைக்கல்லுப் போட்டகுளம், ஓமந்தை - வவுனியா]

**கஜந்தா** (இந்திராணி மணியம் - இரணைமடு - கிளிநொச்சி)

**குருபரன்** [ஆறுமுகம் பாலையா - எட்டியாந்தோட்டை - மலையகம்]

**கப்டன் கோபி** (கந்தையா பேரின்பமூர்த்தி - 6-ம் வட்டாரம், வேலணைத்துறை மேற்கு - யாழ்)

**கப்டன் அகிலன்** (வேலன் மோகனசிறி - உதயநகர்' கைதடி மேற்கு, சாவகச்சேரி - யாழ்)

**கப்டன் வண்டு** (சுப்பிரமணியம் யோகேஸ்வரன் - உடுத்துறை, தாளையடி - வடமராட்சி கிழக்கு)

**லெப் கர்ணன்** (தவரத்தினம் வெஸ்லி தவேந்திரன் - 1-ம் கட்டை, தம்பசிட்டி - பருத்தித்துறை)

**2-ம் லெப். றெனோ** (ஜெயசிங்கம் பேணாட் மதியழகன் -நுணாவில் கிழக்கு - சாவகச்சேரி)

**2 ம் லெப். செனித்** [குமாரசாமி திருவேரகன் - ஏழாலை மத்தி - யாழ்]

**யோகன்** சின்னத்துரை கண்ணன் - சுழிபுரம் கிழக்கு - யாழ்)

**நளா** (லலிதாதேவி நடராசா - புங்குடுதீவு மேற்கு - யாழ்)

**வேல்விழி** [தங்கேஸ்வரி இராசமாணிக்கம் - ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை - யாழ்]

1992ஆம் ஆண்டு மட்டு - ஆலங்குளச் சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**லெப். ரவிக்குலன்/மதன்** [சின்னத்தம்பி அருமைநாதன் - வாழைச்சேனை - மட்டு]

மட்டு - இருதயபுரத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**செல்வராஜ்** [சிவராஜா பாலச்சந்திரன் - இருதயபுரம் மட்டு]

இதே தினம் வீரச்சாவெய்திய -

**ராஜன்** [குமாரசாமி குணராசா - கேணியடி, கொக்குவில் மேற்கு - யாழ்]

மட்டு - சின்னஊறணிப் பகுதியில் சிறிலங்கா விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பலியான தமிழ்ப் பொதுமகன். தாளங்குடா - ஏறாவூர்ப் பகுதியில சிறிலங்கா இராணுவத்தினரால் சுடப்பட்ட 03 தமிழர்கள்.

**ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் [ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்கள்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-7092)

### சிந்தனைக்கு

அனுபவம் அதிக செலவீட்டில் கற்கும் பாடம் ஆனால் அறிவிலி அதைத் தவிர வேறெங்கும் கற்றுக் கொள்ளமாட்டான்.

- பெஞ்சமின் பிராங்கிலின்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 29-07-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
க. பெ. எண்-05

# பிரட்மன் கற்ற பாடம் எது?

"1983 கலவரத்தினால் எல்லோரும் பாடம் படித்துள்ளார்கள். பிரச்சினையையும் தீர்க்க விரும்புகின்றார்கள்." இவ்வாறு "கடந்த பத்தாண்டு கால இனப்பிரச்சினை விவகாரம் பற்றி என்ன சொல்கின்றீர்கள்?" என்ற பத்திரிகையாளரின் கேள்வி ஒன்றிக்குப் பதிலளிக்கையில் வெளிவிவகாரங்களுக்கான ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

அதாவது இனக்கலவரங்கள், பழிவாங்கல் நடவடிக்கைகள் பிரச்சினையைத் தீர்த்து வைக்காது என்பதை அரசாங்கமும், அரசியற் கட்சிகளும் புரிந்துள்ளன என்பதே பிரட்மன் வீரக்கோனின் கருத்தாகும், ஆனால், பிரட்மன் கூறுவது போல் அவரும், சிங்கள தலைவர்களும் எதைப்புரிந்து கொன்டார்கள்? எவ்வாறு பாடம் படித்துக் கொண்டார்கள் என்பது குறித்து பல கேள்விகளும் சந்தேகங்களுமே உள்ளன.

ஏனெனில், 1983 ஆம் ஆண்டு, அதாவது பத்து ஆண்டுகளுக்கு முன் 13 இராணுவத்தினர் திருநெல்வேலியில் கொல்லப்பட்ட போது பழிவாங்கும் நடவடிக்கையாக தென்னிலங்கையில் ஐ. தே. கட்சி அரசாங்கம் பெரும் இனக்கலவரத்தைத் தமிழருக்கு எதிராக கட்டவிழ்த்துவிட்டது. இதன் மூலம், நூற்றுக் கணக்கில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். பல நூறு கோடி ரூபா பெறுமதியான தமிழர்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டன.

இதன் விளைவு சிறிலங்கா அரசாங்கம், இனவாதப் போக்கைக் கடைப்பிடிப்பது வெளியுலகிற்குத் தெரிய வந்தது. வெளிநாடுகளின் கண்டனத்திற்கும் அரசாங்கம் உள்ளாக வேண்டி வந்தது. பொருளாதாரம் பெரியளவில் பாதிக்கப்பட்டது. ஆயிரக் கணக்கான சிங்களவர்களும் தொழில் வாய்ப்பை இழந்தனர்.

இந் நிலையில் தென்னிலங்கையில் தமிழருக்கு எதிராக இடம்பெறும் தாக்குதல்கள், தமிழர்களை விரட்டுதல் என்பதற்கு அப்பால் பொருளாதார ரீதியிலும், உலகில் சிறிலங்காவின் நற்பெயருக்கும் களங்கத்தைக் கற்பிக்கும் என்பதை சிங்கள அரசாங்கம் உணர்ந்து கொண்டது.

# மாவீரர் உருவப் படங்கள் மேலும் வெளிவந்துள்ளன

ஆ. க. வெ. நடவடிக்கையின்போது தற்கொடையாளர்களான பின்வரும் மாவீரர்கள் உருவப்படங்கள் அண்மையில் வெளிவந்துள்ளன.

| | |
|---|---|
| 01. வீ. வே. பட்சன் | — சீனியர் உதயராசா<br>— புன்னாலைக்கட்டுவன் |
| 02. வீ. வே. பிரேம்நாத் | — சீனிவாசகம் கௌரிநாதன்<br>— அம்பாறை |
| 03. வீ. வே. டலியா | — வரலட்சுமி தேவசிகாமணி<br>— வல்வெட்டித்துறை |
| 04. வீ. வே. வினித்தா | — இலங்கேஸ்வரி தியாகராசா<br>— பருத்தித்துறை |
| 05. வீ. வே. பவா | — கதிரித்தம்பி கணேசலிங்கம்<br>— மன்னார் |
| 06. வீ. வே. இந்திரன் | — சண்முகம் பாஸ்கரன்<br>— மட்டு. |
| 07. வீ. வே. மீனாட்சி | — கலைச்செல்வி இராசரட்ணம்<br>— முல்லைத்தீவு |
| 08. லெப். காசி | — மரியான் ஞானம்<br>— மாங்குளம் |
| 09. லெப். பாரதி | — நவரட்ணம் கோபாலபிள்ளை<br>— மட்டு. |
| 10. 2-ம் லெப். நளினன் | — நாகராசா சிவகுமார்<br>— தன்னாமுனை - மட்டு |
| 11. 2-ம் லெப். டொனால்ட் | — இராமசாமி புவனகுமார்.<br>— கிளிநொச்சி |
| 12. 2-ம் லெப். மெடினா/மெடோனா | — செல்வராணி மாயழகன்<br>பூநகரி - மன்னார் |
| 13. 2-ம் லெப். ஜசீர்மா | — சிவலோஜினி சிவானந்தையர்<br>பருத்தித்துறை |

1991ஆம் ஆண்டு ஆ. க. வெ. நடவடிக்கையின்போது ஆனையிறவு பிரதேசத்தில் தம்மை தற்கொடையாளர்களாக்கிக் கொண்ட மேல்வரும் மாவீரர்களின் போஸ்ரர் படங்களை சிறு அன்பளிப்புச் செலுத்துவதன் மூலமாக தமிழீழ மாவீரர் பணிமனை, கொக்குவிலில் பெற்றுக்கொள்ளலாம் என்று தமிழீழ மாவீரர் பணிமனை அறிவித்துள்ளது.

# உயர்தரப் பரீட்சையில் 1,45,000 மாணவர்கள்

[யாழ்ப்பாணம்]

அடுத்த மாதம் இரண்டாம் திகதி தொடக்கம் இருபத்திநான்காம் திகதி வரை நடைபெறவுள்ள க. பொ. த. உயர்தரப் பரீட்சை நாடு முழுவதும் சுமார் 1016 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது எனப் பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல தெரிவித்துள்ளார்.

மேலும் இப்பரீட்சைக்கு நாடு முழுவதும் சுமார் 1,45,000 பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர். இவற்றுள் சுமார் 98,500 பேர் பாடசாலை மாணவர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்மாவட்டத்தில் இப்பரீட்சைக்கு சுமார் 67 பரீட்சை நிலையங்களில் ஒன்பதாயிரத்திற்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர் என யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (யா)

### பரிசளிப்பு

நாளை வெள்ளிக்கிழமை வரணி மகாவித்தியாலயத்தில் பரிசில் நாள் நிகழ்வுகள் நடைபெறும். இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் கலந்து கொள்கிறார்.

# அநுராவுடன் சமரசமுயற்சி; சிறிமாவோ நிராகரிப்பு

(கொழும்பு)

கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட தேசிய அமைப்பாளர் அநுரா பண்டாரநாயக்கவிற்கும் கட்சிதலைமைக்கும் இடையே சமரசம் ஏற்படுத்துவதற்கு கட்சியின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் லஷ்மன் ஜெயக்கொடி, மைத்திரிபாலசேனநாயக்க போன்றோர் மேற்கொண்ட முயற்சிகளுக்குகட்சித்தலைவி திருமதி சிறிமாவோ கதவடைப்பு செய்துவிட்டதாக கூறப்படுகின்றது.

அநுராவின் நடவடிக்கைகளில் திருமதி சிறிமாவோ பெரும் அதிருப்தி கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறதுகுறிப்பாக அவரது இல்லத்திற்கு முன்பாக மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டம் மற்றும் கட்சித்தலைவியின் கடந்த காலத் தவறுகளை அம்பலப்படுத்தப் போவதாக அநுரா கூறியிருந்தமை என்பவற்றால் கோபமடைந்ததுள்ள திருமதி சிறிமாவோ ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகால அரசியல் அனுபவமுடைய தான் இது போன்ற விடயங்கள் குறித்து அலட்டிக் கொள்ளப் போவதில்லை என்றும் கூறியுள்ளார்.

### நீர் முகாமைத்துவ ஆய்வு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் கிளிநொச்சியிலே மேற்கொள்ளப் பட்டுவரும் ஆய்வு வட்ட அமர்வில் கடந்த மாதம் அமர்விலே "நீர்முகாமைத்துவம்" எனும் விடயம் ஆய்வுக்குள்ளாகப் பட்டது. இந்த அமர்விலே திட்ட உபகுழுக்கள், விவசாயிகள் குழுக்கள் போன்ற விவசாய அமைப்புகளும் கலந்து கொண்டன.

சிக்கன முறை நீர்ப்பாசனம் தொடர்பாக விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்பை நடாத்தும் பொறுப்பு நீர்ப்பாசன பொறியியலாளரிடம் கையளிக்கப்பட்டது. அத்தோடு வயல் வாய்க்கால்கள் அனைத்தும் விவசாயிகளினால் சீரமைக்கப்பட வேண்டும் என்றும் விநியோக வாய்க்கால்கள் அனைத்தும் பற்றைக் காடுகள் அகற்றுதல், வாய்க்கால்களில் மேவும் மண் அகற்றுதல் போன்ற வேலைகளை திட்ட உப குழுக்களும், நீர்ப்பாசன திணைக்களமும் இணைந்து விவசாயிகளின் உதவியுடன் செய்வதென்றும், பிரதான வாய்க்கால்களை நீர்ப்பாசன திணைக்களம் முன்னுரிமை அடிப்படையில் செய்து முடிக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

# சுதந்திரக் கட்சிக்குள் குண்டுவீச்சு மோதல்கள்

[கொழும்பு]

சுதந்திரக்கட்சியிலிருந்து அநுரா பண்டாரநாயக்கா இடைநிறுத்தப்பட்டதையடுத்து அநுரா கோஷ்டியினருக்கும், சுதந்திரக்கட்சியின் சிறிமாவோவின் ஆதரவான கோஷ்டியினருக்கும் இடையில் தற்போது கைக்குண்டு வீச்சு சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த வாரம் தெமட்டகொடையில் உள்ள திஸ்ஸமாரகம சுதந்திரக்கட்சி அமைப்பாளர் மேர்வின் சில்வா வீட்டுக்கு குண்டு வீசப்பட்டதில் வீட்டின் முன்பகுதியும் அவரின் காரும் சேதமடைந்தன. இதைத் தொடர்ந்து நொறிஸ்கனல் வீதியில் ரஜிதா சேனரட்ணாவின் வீட்டிற்கு குண்டுவீச்சு நடைபெற்றது. இதனால் வீட்டு கராஜ் சுவர், கூரை என்பன சேதமடைந்தன.

இரு வாரங்களுக்கு முன் பொரளையில் உள்ள சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்காவின் வீட்டிற்கு கைக்குண்டு வீசப்பட்டதும் இதனால் வீட்டிற்கும், அவரின் காரிற்கும் சேதம் ஏற்பட்டதும் தெரிந்ததே.

# கூட்டுப்படைத் தளபதி மணலாறு விரைவு

மணலாறு மண்கிண்டிமலை இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்டதை அடுத்து மணலாறு பகுதிக்கு கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, வடபகுதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ரோகான் தலுவத்த, வெலிஓயா தளபதி பிரிகேடியர் ஆர்.டி. லியனகே ஆகியோர் நேற்று முன்தினம் விரைந்தனர். இவர்களுடன் புனர்வாழ்வு அமைச்சர் பி. தயாரட்ன, மகாவலி காணி நீர்ப்பாசன அமைச்சர் காமினி அத்துக்கோரள ஆகியோரும் சென்றிருந்தனர்.

இதனிடையே மண்கிண்டி மலை முகாம் தகர்க்கப்பட்டதையடுத்து இப்பகுதி சிங்கள குடியேற்றவாசிகள் இடம் பெயர்ந்துள்ளனர். சுமார் 126 சிங்களக் குடும்பங்கள் இவ்வாறு இடம்பெயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### சுற்றாடல் நிகழ்வுகள்

கடந்த ஜூன் 5-ம் திகதி கொண்டாடப்பட்ட உலக சுற்றாடல் தினத்தன்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் பல்வேறு நிறுவனங்களுடன் இணைந்து பல வேலைத் திட்டங்களை பரவலாக மேற் கொண்டிருந்தது.

# வெளியேற்ற உத்தரவை எதிர்த்து சீக்கிய அகதி இளைஞர் ஜேர்மனியில் வழக்கு தாக்கல்

# மத்திய ரிசர்வ் பொலிசாரை ஈடுபடுத்தப் பணிப்பு

(சென்னை)

பழநி மக்களவைத் தொகுதியிலும், ராணிப்பேட்டைசட்மன்றத் தொகுதியிலும் நேர்மையாகவும், சுதந்திரமாகவும் இடைத்தேர்தல்கள் நடைபெறுவதற்கு உகந்ததாக சட்டம் ஒழுங்கு நிலைமைகள்

றும் இந்தப் பணி உடன் தொடங்கி இம்மாதம் 31ம் திகதிக்கு முன் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்றும் தேர்தல் கமிஷன் கூறியுள்ளது.

மத்திய அரசு படைகளை உரிய விதத்தில் பயன்படுத்துமாறும் தமிழக அரசைக்

டது. ஆயிரக் கணக்கான சிங்களவர்களும் தொழில் வாய்ப்பை இழந்தனர்.

இந் நிலையில் தென்னிலங்கையில் தமிழருக்கு எதிராக இடம்பெறும் தாக்குதல்கள், தமிழர்களை விரட்டுதல் என்பதற்கு அப்பால் பொருளாதார ரீதியிலும், உலகில் சிறிலங்காவின் நற்பெயருக்கும் களங்கத்தைக் கற்பிக்கும் என்பதை சிங்கள அரசாங்கம் உணர்ந்து கொண்டது. ஆகையால்தான் தென்னிலங்கையில் இனக் கலவரங்கள் மூலம் தமிழர் கொல்லப்படுவதையோ அன்றி, அவர்களின் சொத்துக்கள் அழிக்கப்படுவதையோ சிங்கள அரசு கைவிட எத்தனித்தது.

மாறாக, இனப்படுகொலைகளின் பெரும்பாலானவற்றை வடக்கு - கிழக்கிலும், தெற்கில் இரகசியமாகவும் மேற்கொளள முடிவுசெய்தது. அத்தோடு நேரடியாக காடையர்களாலோ, இராணுவத்தாலோ செய்ய முடியாததை விமானத்தின் மூலமும், ஏறிகணை மூலமும் செய்ய முற்பட்டது. அதாவது இனப்படுகொலையின் இடத்தையும், முறையையும் சிங்கள அரசு மாற்றியுள்ளதே ஒழிய அதனைக் கைவிடவில்லை. பிரட்மன் வீரக்கோனும் "கலவரத்தால் எல்லோரும் பாடம் படித்துள்ளார்கள்" எனக் கூறியதும் அதுவே.

அவ்வாறு இல்லாமல், இனப்பிரச்சினை தீர்விற்கு வஞ்சம் தீர்ப்பது அதாவது, இராணுவத்தினர் மீதான தாக்குதலுக்கு அப்பாவித் தமிழ்மக்கள் மீது வஞ்சம் தீர்பபது தவறு என அரசாங்கம் பாடம் கற்றுக் கொண்டதாக இல்லை. பிரச்சினைத் தீர்விற்கு இனப்படுகொலையை நிறுத்த வேண்டுமென அரசாங்கம் முடிவு செய்யவுமில்லை.

அரசாங்கம் அவ்வாறு முடிவு செய்திருக்குமானால், 1983ஆம் ஆண்டின் பின்னரும் இனப்படுகொலையில் ஈடுபட்டிருக்காது. இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு ஒன்றைக் காணவே முயற்சித்திருக்கும். இதன் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதில் கணிசமான அளவில் முன்னேற்றம் ஏற்பட வாய்ப்புக்கள் உருவாகி இருக்கும் என்பதோடு, இலங் கயில் இரத்த ஆறு ஓடுவதும் பெருமளவு தவிர்கப்பட்டிருக்கும். ஆனால், அதனை அரசு செய்யவில்லை அபபாவித் தமிழரின் உயிரையும், உடைமைகளையுமே அழித்தது.

இந்நிலையில் பிரட்மன் வீரக்கோனும், மற்றவர்களும் புரிந்து கொண்டது பிரச்சினைக்கு தீர்வு பகிரங்கமாக தமிழருக்கு எதிராக கட்டவிழ்த்து விடும் இனக்கலவரங்கள் அல்ல. இரகசியமாக, தகவல் வெளியுலகிற்குப் பரவாது மேற்கொள்ளப்படும் இனப்படுகொலைகளே என்பதாகும். இதை விடுத்து, பிரச்சினைக்கு சுமுகமான அரசியல் தீர்வொன்றை அரசு காண வேண்டும் என்ற பாடத்தினைக்கற்றிருப்பின், இனப்படுகொலை என்பதை அரசு பத்து ஆண்டிற்கு முன்பே நிறுத்தியிருக்க வேண்டும்.

# சீக்கிய அகதி இளைஞர் ஜெர்மனியில் வழக்கு தாக்கல்

(பெர்லின்)

தனது வெளியேற்ற உத்தரவை எதிர்த்து இந்திய சீக்கிய இளைஞர் ஒருவர் ஜெர்மன் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ததைத் தொடர்ந்து அவரது விண்ணப்பம் பரிசீலிக்கப்படும் வரை குறைந்தது ஒரு மாதம் அவர் ஜெர்மனியில் அகதியாக தங்கியிருக்க நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

21 வயதான தஜிந்தர்சிங் என்ற இந்த சீக்கிய அகதி இளைஞர் தாக்கல் செய்த வழக்கு ஜெர்மனியில் புதிய குடியேற்றச் சட்டம் ஜூலை முதலாம் திகதி அமுலுக்கு வந்தபின் இடம்பெற்ற முதலாவது அரசியலமைப்பு வழக்காகும். எனினும் இவரின் சட்ட நடவடிக்கை அகதிகள் ஜெர்மனிக்குள் வருவதை தடுக்கும் அதிகாரிகளின் முயற்சியில் தளர்வை ஏற்படுத்தாது என ஜெர்மன் குடியேற்ற அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

தஜிந்தர்சிங்கின் வழக்கு அகதிகளுக்கான எதிர்கால விண்ணப்பத்திற்கு முன் உதாரணமாக விளங்காது என்பதை பிராங்போட் விமானநிலைய முகாமில் வைக்கப்பட்டிருந்த கானா நாட்டு அகதி ஒருவரின் விண்ணப்பத்தை நீதிமன்றம் நிராகரித்திருப்பதை உறுதிப் படுத்தியுள்ளது. கானா பிரஜை இம்சைக்கு உள்ளாவார் என்பதை ஏற்க நீதிமன்றம் மறுத்துவிட்டது.

காவிரி நீர்ப் பங்கீடு

## கர்நாடகத்தைப் பாதிக்கும் வகையில் அரசு செயற்படாது

(பங்களூர்)

கர்நாடக விவசாயிகளைப் பாதிக்கும் வகையில் மத்திய அரசு காவிரிநதி நீர்ப் பங்கீடு தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்காது என மத்திய அரசு உறுதியளித்துள்ளது.

இந்த உறுதிமொழி கர்நாடக பாராளுமன்ற உறுப்பினர்களிடம் மததிய அரசினால் வழங்கப்பட்டதாக கர்நாடக முதலமைச்சர் வீரப்பமொய்லி தெரிவித்தார். கடந்த செவ்வாயன்று முதலமைச்சர் மொய்லி மத்திய நீர்வளத் துறை அமைச்சர் வி. சி. சுக்ளாவைச் சந்தித்துப் பேசினார்.

காவிரி நீர் தமிழகத்திற்கு வழங்கப்பட வேண்டும் எனக் கோரி ஜெயலலிதா உண்ணாவிரதம் இருந்ததும், மத்திய அமைச்சர் சுக்ளா தலையிட்டு மத்திய அரசின் உறுதிமொழிகள் சிலவற்றைக் கூறியதையடுத்து அவர் உண்ணாவிரதத்தைக் கைவிட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேல் - ஹிஸ்புல்லா படைகள் லெபனானில் கடும் மோதல்

தென் லெபனான் மீது இஸ்ரேலிய யுத்த விமானங்களும் பீரங்கிகளும் தொடர்ந்து தாக்கிவரும் அதேவேளைலெபனான் முஸ்லிம் தீவிரவாதிகள் வடஇஸ்ரேல்மீது தொடர்ந்து ஏவுகணைத்தாக்குதல் நடத்தி வருகின்றனர். சியா தீவிரவாதிகள் இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் உள்ள தென்லெபனான்பகுதியில் நடத்திய தாக்குதலில் இஸ்ரேலிய இராணுவ கோப்ரல் பலியானார் மூவர் காயமடைந்தனர். இஸ்ரேல் லெபனானில் உள்ள பாலஸ்தீன மற்றும் ஹிஸ்புல்லா (ஈரான் ஆதரவு) கிளர்ச்சியாளர் தளங்கள் மீது தாக்குதல் நடத்தியது. இதுவரை இப் பகுதியில் 40 மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த 10 வருடங்களில் இப் பகுதியில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் தற்போதைய தாக்குதல தீவிரமாக உள்ளதாக கூறப்படுகிறது.

ஷிஸ்புல்லா மற்றும் பாலஸ்தீன கிளர்ச்சிக் குழுக்களின் தலைவர்கள், இஸ்ரேல் இப் பகுதியிலிருந்து வாபஸ்பெறும் வரை தமது தாக்குதல் தொடரும் என சூளுரைத்துள்ளனர். இப் பகுதியில் உள்ள கிளர்ச்சியாளர்களின் தளங்களை அழிக்கும் வரை இஸ்ரேல் தனது தாக்குதலை தொடரும் என இஸ்ரேலிய இராணுவத் தளபதியும் தெரிவித்துள்ளார்.

### கால்நடைகள் பலி

ரஷ்ய பண்ணை ஒன்றின் மீது இடி விழுந்ததில் 111 மாடுகள் பலியாகின. இதனால் 2 கோடி ரூபிள்கள் வரை நட்டமேற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இவ்வாண்டில் 27 பண்ணைகள் இவ்வாறு எரிந்து சாம்பலாகியுள்ளன நூற்றுக்கணக்கான கால்நடைகள் பலியாகியுள்ளன.

ஜெயலலிதா உண்ணாவிரதம்

## பிரசாரத்திற்கு பயன்படுத்த தடை விதிக்கக் கோரிக்கை

அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் இரண்டு தொகுதிகளுக்கான இடைத் தேர்தல்களில் காவிரி நீர் தொடர்பாக முதலமைச்சர் ஜெயலலிதா மேற்கொண்ட உண்ணாவிரத காட்சிகளை வீடியோ மூலம் பிரசாரம் செய்ய தடை விதிக்க வேண்டும் எனத் தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி, தேர்தல் திணைக்களத்தைக் கேட்டுள்ளார்.

தலைமை தேர்தல் ஆணையாளருக்கு அவர் அனுப்பிய தந்தியில், தமிழக அரசின இந்த உண்ணாவிரதக் காட்சி தேர்தல் பிரசாரத்திற்குப் பயன்படுவது முறைகேடானது எனக் குறிப்பிட்டுள்ளார்.

## ஈடுபடுத்தப் பணிப்பு

(சென்னை)

பழநி மக்களவைத் தொகுதியிலும், ராணிப்பேட்டைசட்மன்றத் தொகுதியிலும் நேர்மையாகவும், சுதந்திரமாகவும் இடைத்தேர்தல்கள் நடைபெறுவதற்கு உகந்ததாக சட்டம் ஒழுங்கு நிலைமைகள் இல்லை என்று தேர்தல் கமிஷன் கூறியுள்ளது.

இந்த தொகுதிகளில் மத்திய ரசு மத்திய றிசர்வ் பொலிஸ் டையை உடனடியாக பணியில் ஈடுபடுத்த வேண்டும் என்றும் இந்தப் பணி உடன் தொடங்கி இம்மாதம் 31ம் திகதிக்கு முன் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்றும் தேர்தல் கமிஷன் கூறியுள்ளது.

மத்திய அரசு படைகளை உரிய விதத்தில் பயன்படுத்துமாறும் தமிழக அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.

மத்திய அரசும், தமிழக அரசும் இந்த உத்தரவுகளின் நிறைவேற்றம் பற்றி ஆகஸ்ட் முதல் திகதிக்கு முன்பு அறியத்தர வேண்டும் என்றும் தேர்தல் கமிஷன் கூறியுள்ளது.

## கண்காணிப்புக்குழு நியமனம் உடன் நிறைவேற்ற வேண்டும்

ஜெயலலிதா வற்புறுத்து

காவிரி நதிநீர் பங்கீடு தொடர்பான நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவு அமுல்படுத்தப்படுவதை கண்காணிக்கும் குழுவை உடன் நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா பிரதமர் நரசிம்மராவையும் மத்திய அரசையும் வற்புறுத்திக் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக பிரதமருக்கு அவர் எழுதியுள்ள கடிதமொன்றில் மேட்டூர் அணையில் நீர் வரத்து மிகவும் குறைந்து போயிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய அமைச்சர் வி.சி. சுக்ளா தமக்கு அளித்த உறுதிமொழி உடன் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தப் பிரச்சினையை சட்ட ரீதியாக சந்திக்காமல் மத்திய அரசு தள்ளிப்போடக்கூடாது என்றும் தமது கடிதத்தில் எடுத்துக்காட்டியுள்ள தமிழக முதல்வர் ஜெயலலிதா, கர்நாடக முதல்வர் வீரப்ப மொய்லி இத்தகைய கமிஷனை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்திருப்பதாக கூறியிருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

### நீதிபதி மாற்றம்

தடா சட்டத்தின் கீழான வழக்குகளைவிசாரிக்கும்சிறப்பு நீதிமன்ற நீதிபதிகள் சிலரின் பதவிகள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இதுவரை இரண்டாவது நீதிபதியாக இருந்த சௌந்தர பாண்டியன் அப் பதவியில் இருந்து விடுவிக்கப்பட்டு அவருக்குப் பதிலாக இராதா கிருஷ்ணன் நியமிக்கப்பட்டுள்ளார். ஆறாவது மேலதிக நீதிபதி பாலசுப்பிரமணியன் தடா சிறப்பு நீதிமன்றத்தின் மூன்றாவது நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
13
–
07
–
1972



வீரச்சாவு
23
–
07
–
1991

### வீரவேங்கை பட்சன்

(சீனியர் உதயராசா)


திதி: 29-07-93

பட்சன் எனும் நாமம் கொண்ட
தீயினில் எரியாத தியாகமே
தீபத்தின் ஒளியான வேங்கையே
தீரத்தின் காவிய நாயகனே
தீர்த்திடுவோம் உன் தாகம் தனை.

– குடும்பத்தினர்

பட்சன் வீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு. (5561)

## நீங்காத நினைவுகளில் 31-ம் நாளும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

# கைத்தொழில் நிறுவனங்கள்; பதிவு செய்ய வேண்டுகோள்

தமிழீழத்தில் கைத்தொழில் மேம்பாட்டினை மையமாக வைத்து அதனது முதற்கட்ட நடவடிக்கையாக கைத்தொழில் நிறுவனங்களைப் பதிவு செய்யும் வேலைகளை தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. தமிழீழத்திலே முழுமையாக இயங்கிக் கொண்டிருக்கும் கைத்தொழில் நிறுவனங்களும், கடந்த காலங்களில் இயங்கி தற்கால சூழ்நிலையால் இயங்காதிருக்கும் கைத்தொழில்நிறுவனங்களும், புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும் கைதத்தொழில் நிறுவனங்களும் தம்மை தவறாது பதிவு செய்து கொள்ள வேண்டும் என தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம் விடுத்துள்ள செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கிறது.

பதிவுசெய்யும்நடவடிக்கைகளில் சவர்க்காரம், கண்ணாடி, இரசாயனப் பொருள்கள், புடவைக் கைத்தொழில், விவசாய உபகரணங்கள், உலோக உற்பத்திப் பொருள்கள், இறப்பர், இறப்பர்சார்ந்தபொருள்கள், தும்பு சார்ந்த பொருள்கள், தோல் பொருள்கள் உற்பத்தி, மின்சார உபகரணங்கள், இலத்திரனியல், கட்டடப் பொருள்கள், உணவு உற்பத்தி (உணவகம் தவிர்ந்த), கால்நடை உணவு (கோழித்தீன் உட்பட), மருந்து வகை, பல்பொருள்கள் (கற்பூரம், மெழுகுவர்த்தி, பற்பொடி, சீயாக்காய் பவுடர், ஊதுபத்தி போன்றன) ஆகிய நடவடிக்கைகள் உள்ளடங்கும்.

கைத்தொழில் நிறுவனங்களை பதிவு செய்யும் நடவடிக்கை 15-08-93 உடன் முற்றுப்பெற்று விடுமெனவும் அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜூலை நிவாரணம் வழங்க செயலகம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்தவர்களுக்கான ஜூலை மாதத்திற்குரிய இலவச நிவாரண விநியோகத்திற்கான நடவடிக்கைகளை யாழ். செயலக புனர் வாழ்வுப் பகுதி எடுத்து வருகின்றது.

இதற்கான பொருள்களின் விநியோகப்பட்டியல் தயாரிக்கும் வேலையில் மேற்படி பகுதியினர் ஈடுபட்டுள்ளனர்.

தற்சமயம் இடம்பெயர்ந்த மக்களுக்கான இலவச நிவாரண உணவு முத்திரைகள் கொழும்பில் இருந்து யாழ். செயலகத்திற்கு எடுத்து வருவதில் மேலும் தாமத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இருந்தும் நிவாரண முத்திரைகள் உரிய காலத்தில் வந்து சேராதவிடத்தும் ஜூன் மாதத்திற்குரிய நிவாரண விநியோகம் போன்று இந்த மாதத்திற்கான நிவாரண விநியோகத்தினையும் முத்திரையின்றி விநியோகிக்க முடிவாகி இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. [பா].[தி]

## அழிவின் விளிம்பில் சிங்கள இனத் தலைமை

### இளம்பரிதி தெரிவிப்பு

(வடமராட்சி)

சிங்கள இனத்தின் தலைமை எதிர்கால அழிவின் விளிம்பில் தான் உள்ளது. இதனை சிங்கள புத்திஜீவிகள், அறிவாளிகள் தெளிவுபடுத்தி வருகின்றனர். சிங்கள இனத்தின் தலைமை ஓர் அழிவுப்பாதைக்கு தூபமிடுகிறது.

இவ்வாறு நேற்று முன்தினம் இரவு 8மணியளவில் வல்வெட்டித்துறை தீருவில் மைதானத்தில் திரு. செல்வேந்திரா தலைமையில் நடைபெற்ற கறுப்பு நாள் பொதுக்கூட்டத்தில் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது ஜூலை 1983 கறுப்பு நாள் வெலிக்கடைபடுகொலை நாள். உலகத்தமிழினத்தின் நெஞ்சங்களிலிருந்து விடுபட முடியாத கனத்த நாள். அந்த தினத்தில் இடம்பெற்ற உறுதிகள் உணர்வுகள் எங்களுடைய எதிர்கால விடிவைப் பெற தளமாக அமைந்தது.

நாம் அன்று அழுதோம். சிங்கள எதிரிகள் எம்மை அழவைத்தனர். எம்மை ஏமாற்றினார்கள். ஆனால் இன்று நாங்கள் எதிரியை அழவைக்கிறோம். ஏமாந்தவர்களல்ல என்பதையும் தெளிவுபடுத்தி வருகிறோம்.

எங்கள் இனத்திற்கு பல கொடுமைகளையும் சித்திர வதைகளையும் செய்தவர்கள் இன்று சிறையில் எங்களது பாதுகாப்பில் இருந்து கொண்டு எமது தலைமைக்கும் பாதுகாப்புக்கும் மதிப்பளித்து உண்ணா விரதத்தை மேற்கொண்டார்கள்.

முறையில் அப்பாவி மக்களை படுகொலை செய்கிறான். இழப்புக்களும் பாதிப்புக்களும் எமது போராட்டத்தை வலுப்படுத்தும் இது தலைவரின் கூற்று

வெலிக்கடையில் இறந்த53 மக்களில் தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன் ஆகியோரை எமது நெஞ்சத்தில் நிறுத்திப் பார்க்க வேண்டும். இவர்கள் வீரத்துடன் இறந்தவர்கள். இவர்களது இழப்பை மறக்க முடியாது, மறக்கவும் கூடாது என்றார்.

தொடர்ந்து கடற்புலிகள் அரசியற்துறை பொறுப்பாளர் திரு. வரதன், உடுப்பிட்டிக் கொத்தணி அதிபர் திரு என். அனந்தராஜ் வடமராட்சி அரசியற் பொறுப்பாளர் திரு. பா. பைந்தமிழன், செஞ்சோலைப் பொறுப்பாளர் செல்வி ஜனனி ஆகியோரும் உரையாற்றினர். (யோ)

## கலந்துரையாடல்

நாளை பி. ப. 2.00மணிக்கு கோண்டாவிலில் உள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக யாழ். மாவட்ட செயலகத்தில்கால்நடைவளர்ப்போர்க்கான கலந்துரையாடல்நடைபெறவுள்ளது. இதில் கால்நடை வளர்ப்போரும் இறைச்சிப் பாவனைக்காக வெளி மாவட்டங்களிலிருந்து ஆடு, மாடுகள் மற்றும் கோழிக்குஞ்சுகள் கொண்டு வந்து விற்பனை செய்பவர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுகொள்ளப்படுகின்றனர்.

## பெற்றுக் கொள்ளவும்

தம்பியையா கரிகரன் சில்லாலை பண்டத்தரிப்பு என்பவரது அடையாள அட்டையும் ஒருதொகைப் பணம், திறப்புக்கோர்வை ஒன்றும் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

## இந்திய

ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து தி.மு.க தலைவர் மு. கருணாநிதி கண்டனம் தெரிவித்துள்ளார்.

## விமான

படி அனர்த்தங்கள் பற்றிய முழு அளவிலான அறிக்கை ஒன்றையும் ஆதாரமாக வெளி வந்த பத்திரிகைச்செய்திகளையும் கொண்டுவிரைவில் கொழு

## 31-ம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

### திருமுருகன் இராமலிங்கம்

[உசன், மிருசுவில்]

பிறப்பு
1932-07-14

இறப்பு
1993-06-29



அந்தியேட்டி: 29-07-1993

கண்ணின் மணி போலக்
காத்திருந்தீர் எம்மையென்றே
எண்ணிக் களித்திருந்தோம்
எந்நாளும் நாமும்
மண்ணில் தவிக்கவிட்டு ஈசன்
மலரடியை சேர்ந்தீரோ?
விண்ணில் உம் ஆன்மா
சாந்தியுற வேண்டுகின்றோம்.

மனைவி: தவமணி
பிள்ளைகள்: சிவசோதி (பிரான்ஸ்), பூபாலசிங்கம் (பிரான்ஸ்), தெய்வநாயகி, சிவானந்தசோதி (கனடா) சிவபாதம் (பிரான்ஸ்), நித்தியானந்தசோதி (கனடா) சிறீபாஸ்கரன், றங்கநாயகி (கனடா)
மருமக்கள்: சந்திரா (பிரான்ஸ்) மேரிகொன்செற்ரா (பிரான்ஸ்), அழகராசா.
பேரப்பிள்ளைகள்: செலின் (பிரான்ஸ்), டிலக்சன் (பிரான்ஸ்), நிதர்சன், டயல்சன், நிதர்சனா.
(5543

## ஓராண்டு நீங்காத நினைவலைகள்



தமிழீழ மண்ணில்
1976-02-19

தமிழன்னை மடியில்
1992-08-08

### லெப்டினன்ட் ஆனந்தக்குமார் / சாள்ஸ்

(பாலசுப்பிரமணியம் தெய்வேந்திரன்)

திதி 1993-07-29

தமிழ் இனத்தின் விடிவிற்காய்
இளமைகளை உதறிவிட்டு
இலட்சிய நெஞ்சனாய்

அமரர்

# திரு. ஆறுமுகம் சிவபாலன் (துரை)

(பெரிய கடற்கரை, தொண்டைமானாறு)

**தோற்றம்** 03-03-1957 **மறைவு** 29-06-1993

வாதுவை வந்தது-உனை
வா என்றழைத்தது
வாரி அணைத்தது - உன்
வாழ்வை முடித்தது

ஊர் தவித்தது
உறக்கம் இழந்தது,
உன் உடல் தனை
உருட்டி அழுதது

ஆண்டவனே ஆண்டவனே
உதயத்தை ஏன் அஸ்தமித்தாய்
இதயத்தில் நினைவை மட்டும்
ஏன் இங்கு விட்டு விட்டாய்.

29-07-93 இன்று எமதில்லத்தில் (தொண்டைமானாறு) நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும அழைக்கின்றோம்.

பிள்ளையார் வீதி, மயிலிட்டி. (5524) - மனைவி, பிள்ளைகள்.

---

# மரண அறிவித்தல்

## திருமதி இராசமலர் சிவஞானசுந்தரம்

(ஆசிரியை சென். தோமஸ் றோ. க. பெ. பா.)

தும்பளையைச் சேர்ந்த திருமதி இராசமலர் சிவஞானசுந்தரம் (ஆசிரியை சென். தோமஸ் R. C. G. S.) 21-07-93 இல் காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 29-7-93 மாலை 2-00 மணியளவில் இவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் தகனக் கிரியைக்காக தும்பளை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அதிபர்
(சென். தோமஸ் றோ. க. பெ. பா)

தும்பளை வீதி,
பருத்தித்துறை.

[5556]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூலை மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

...ளித்து உண்ணா விரதத்தை மேற்கொண்டார்கள்.

எங்கள் போராட்டம் நியாயமானது. தர்மம் கொண்டது. எமது போராட்டத்தை எந்த சக்தியாலும் மழுங்கடிக்க முடியாது. இந்த உண்மையை அனைவரும் அறிவார்கள்.

நாங்கள் எமது உரிமைக்காக எதிரியின் தளம் தேடி யுத்தம் செய்கிறோம். கோழைத்தனம் கொண்ட எதிரி மிலேச்சத்தனமான

---

உணவுப்

பொருள்களை உட்கொள்வதை தவிர்ப்பதன் மூலம் இந்நோய்களில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நீரிழிவு நோய் பாவனைக்கான மருந்துகள் பிராந்திய சுகாதாரசேவைகள் பணிமனையின் கீழுள்ள மருத்துவ மனைகளில் தீர்ந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் பிராந்திய பணிமனையின் கீழுள்ள கிளிநொச்சி யாழ் மாவட்டங்களிலுள்ள அரச மருத்துவ மனைகளில் நீரிழிவு நோய்க்கு பாவிக்கப்படும் மருந்துகள் தீர்ந்துவிட்டதாகவும் இதனால் இந்நோய்க்கிலக்கானவர்கள் பெரும் சிரமத்திற்குள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டது. (சி) (நி)

---

கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

---

வலிமேற்கு

களை அழைத்து வருகின்றது.

இவர்கள் இன்று காலை காங்கேசன்துறை துறைமுகத்தில் இருந்து ''குமண'' கப்பல் மூலம் பருத்தித்துறை துறைமுகத்திற்கு அழைத்து வரப்படுவர் என தெரியவருகின்றது. (நி), (பா)

---

இராணுவச்

பட்டுவிட்டதாகவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இவர்களின் விபரங்களை விடுதலைப் புலிகளிடமிருந்து பெற்றுத்தருமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியை இராணுவத் தளபதிகள் நாடியுள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

கொல்லப்பட்ட படையினரின் அஸ்தியையும், அடையாளத்தகட்டையும் மீளத்தருமாறு இவர்கள் கோரியுள்ளனர். வழமையாக இராணுவம் இவ்வாறு கேட்டுக்கொள்வதில்லை என பி. பி. ஸி. சுட்டிக்காட்டியது. கொல்லப்பட்ட படையினரின் சடலங்களை விடுதலைப் புலிகள் எரித்து விட்டதால் படையினரை அடையாளம் காண சடலங்களை புகைப்படம் பிடித்திருந்தால் அவற்றை தந்துதவுமாறும் அதிகாரிகள் கேட்டுள்ளனராம்.

---

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 28-07-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10533

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42-3339, 26-2297, 26 6842, 24-4560, 24-6972, 26-1658, 24-6489, 26-6628, 28-1062, 24-0207, 28-2511, 41-1531, 26 0594, 24-1259.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-3436, 22-5622.

---

யும் கொண்டுவிரைவில் கொழும்புசெல்லவுள்ளதாகவும் அங்கு பாதுகாப்பு, அமைச்சர் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு உயரதிகாரிகள் ஆகியோரை நேரில்சந்தித்துவிளக்கிஇதனை உடனடியாக நிறுத்தும்படி கோரிக்கை விடவுள்ளதாகவும் தெரிவித்தார்.

---

இந்தியப்

தன.

பிரேரணை மீதான மூன்று நாள் விவாதத்தின் பின், நேற்று மாலை வாக்கெடுப்பு நடைபெற்றது. சில உறுப்பினர் இலத்திரனியல் கருவி தமது வாக்குகளைச் சரியாகப் பதியவில்லை என ஆட்சேபம் தெரிவித்தனர். சபாநாயகர் ஆட்சேபம் தெரிவித்த உறுப்பினரிடமிருந்து எழுத்து மூலம் விருப்பத்தைத் தெரிவிக்குமாறு பெற்று இறுதி முடிவை அறிவித்தார்.

---

விடுதலை

தினை ஆரம்பிக்கவில்லை. நாமாகவே இந்த முடிவிற்கு வந்துள்ளோம்.

எமது விடுதலை உறுதியான பின்னரே நாம் எமது உண்ணாவிரதத்தைகைவிடுவோம். இம்முறை உண்ணாவிரதத்தின்போது முதல் ஐந்து நாட்களும் நீர் அருந்துவோம். இதற்கிடையில் எமது விடுதலை தொடர்பான ஓர் உறுதியான முடிவிற்கு அரசு வரத் தவறும் பட்சத்தில் நாம் நீர் அருந்துவதை நிறுத்துவோம். இதன் பின்னர் விடுதலை நோக்கியேபோராட்டம் தொடரும் என்றார்.

நாம் நீர் அருந்தும் முதல் ஐந்து நாட்களுக்குள் அரசு ஏதாவது சமரச முயற்சியைத் தொடருமானால் தொடர்ந்தும் நீரை மட்டும் அருந்தியவாறு உண்ணாவிரதத்தை தொடரவுள்ளோம். எமது விடுதலை உறுதிப்படுத்தப்படும் வரை உண்ணாவிரதத்தை எந்தக் கட்டத்திலும் கைவிடமாட்டோம் என்றார்.

[நி]

---

வீறு நடைபோட்ட சாள்ஸே!
வளலைத்தாய் உன் உயிரை
கரங்களிலே ஏந்திவிட்டாள்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சிவன்கோயிலடி,
சித்தன்கேணி.

— குடும்பத்தினர்

[5559]

---

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்: 24 — 11 — 1971



ஆ. க. வெ சமரில் 29 — 07 — 1991

## லெப்டினன்ட் கர்ணன்

(வெஸ்லி தவேந்திரன் தவரத்தினம்)

(ஹாட்லிக் கல்லூரி மாணவ தலைவன்)

மண்ணில் நீ நல்ல வண்ணம்
வாழ்தல் என்ற
எம்மவர் அவா
இமயம் என நீண்டு வளர்ந்தது
மண் நன்றாக வாழ வேண்டும்
என்ற பெண்ணம் பெரிய எண்ணத்தை
இமயம் என இம் மண்ணிற்கு. வழங்கி
எவறெஸ்ட் என உன் புகழ்
நிறுவிச் சென்ற உன்னை
இருபது ஆண்டுகள் வாழ்ந்த
உன்னை
எண்ணும் தோறும்
மனம் ............
மனமாகவே இனம் காட்டுகிறது.

— குடும்பத்தினரும்,
நண்பர்களும்.

'சத்தியபுரி'
1-ம் கட்டை பருத்தித்துறை.

(5558)